ஆதித்யஹ்ருதயம்

(அர்த்தத்துடன்)

87
4-55

87

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
PTP
6 1955
MADRAS

C

பி. டி. பாணி கம்பெனி,

17, வெங்கடாசல செட்டி தெரு,

ட்கேணி, மதருஸ்-5.

[அணா 0-2-6

Q2:417
N55
97873

தமிழில் பாணி சீரீஸ் புத்தகங்கள்

1	யஜுர்வேத ஸந்தியாவந்தனம்	அணா	2/6
2	ருக்வேத ஸந்தியாவந்தனம்	,,	3
3	ஸ்யாமளா தண்டகம்	,,	1
4	முகுந்தமாலா, நாமாவளியுடன்	,,	2
5	ஸாமவேத ஸந்தியா வந்தனம்	,,	3
6	ஸ்தோத்திரமாலா	,,	4
7	கல்பத்ரயம்-3 பூஜைகள்(கலர்படம்)		5
8	விஷ்ணு ஸஹஸ்ரநாமம்	,,	7
9	ஸுப்ரமண்ய புஜங்க ஸ்தோத்திரம்		2
10	லக்ஷ்மி ஸகஸ்ரநாமம்	,,	7
11	லலிதா ஸகஸ்ரநாமம்	,,	8
12	ஸுப்ரமண்ய பூஜாவிதி	,,	4
13	புருஷஸூக்தம்	,,	2
14	இந்திராக்ஷி சிவகவச ஸ்தோத்திரம்		2/6
15	ஆதித்யஹ்ருதயம், அர்த்தத்துடன்		2/6
16	ஸௌந்தர்யலஹரி	,,	2/6
17	பஜகோவிந்தம், கோபிகா கீதை	,,	1
18	ஸுப்ரமண்ய ஸஹஸ்ரநாமம்	,,	8
19	மஹாலக்ஷ்மி அஷ்டோத்ரசத நாமம்		2/6
20	சிவாநந்தலஹரி	,,	2
21	யஜுர் உபாகர்மம்	,,	2
22	நவக்ரஹ ஸ்தோத்திரம்	,,	3

பாணி சீரீஸ்—15

ஆதித்ய ஹ்ருதய ஸ்தோத்ரம்

கல்லிடைக்குறிச்சி
காசி விசுவநாத சாஸ்திரிகளால்
தொகுக்கப்பட்டது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
OCT 1955
MADRAS

பி. டி. பாணி கம்பெனி,
17, வெங்கடாசல செட்டி தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

காபிரைட்] 1955 [அணா 2½

ஸ்த்ரீகளுக்குரிய

ஸ்தோத்ர புத்தகங்கள்

(ஆர். எஸ். சுப்பலக்ஷிமி அம்மாள் இயற்றியது)

		அணா
பார்வதி அம்மன் சோபனம்	....	9
ஜீவ நாடகம்	....	9
லலிதாம்பாள் சோபனம், தேவி பாடம்	....	8
தினசரி ஸ்தோத்திரம்	....	8
குசல வாக்கியம்	....	8
வால்மீகி ராமாயணப் பாட்டு	....	8
அனந்தங்காடு	....	4
ஸாவித்ரி பாடம்	....	4
குறவஞ்சி	....	6
ஐந்து கும்மிகள்	....	4

97873

82:417 N55

ஸ்ரீரஸ்து

ஆதித்யஹ்ருதய ஸ்தோத்ரம்

அஸ்ய ஸ்ரீ ஆதித்யஹ்ருதய ஸ்தோத்ர மஹாமந்த்ரஸ்ய, அகஸ்த்யோ பகவான் ரிஷி:, அனுஷ்டுப்ச்சந்த:, ஸ்ரீஸூர்யநாராயணோ தேவதா, நிரஸ்தாசேஷ விக்னதயா ஸர்வத்ர ஜயஸித்யர்த்தே ஜபே வினியோக:.

॥ த்யானம் ॥

ஜயதி ஜயதி ஸூர்ய: ஸப்தலோகைகதீப:
கிரண ம்ருதிததாப: ஸர்வது:க்கஸ்யஹர்தா।
அருண கிரணகம்ய: சாதிராதித்ய மூர்தி:
பரம பரம திவ்ய: பாஸ்கரஸ்தம் நமாமி ॥

(பதவுரை) ஸப்தலோகைகதீப: - ஏழு உலகங்களுக்கு முக்கிய தீபம் போன்றவரும், கிரணம்ருதிததாப: - கிரணங்களால் போக்கடிக்கப்பட்ட தாபத்தை உடையவ

ரும்,ஸர்வ துஃக்கஸ்ய-எல்லாவித துக்கத்தை, ஹர்தா - போக்கடிப்பவரும், அருணகிரண கம்யஃ - அருணனுடைய கிரணங்களால் அறியக்கூடியவரும், ஆதிஃ-முதன்மையான வரும், பரம பரம திவ்யஃ - ரொம்ப மிகவும் பிரகாசிக்கிறவரும், பாஸ்கரஃ - ஒளியை பரவச்செய்கிறவருமான, ஸூர்யஃ-யாதொரு சூரியன், ஆதித்யமூர்திஃ - சூரியநாராயண மூர்த்தியாக, ஜயதி ஜயதி-விளங்குகிறுரோ, தம் - அந்த பகவானை, நமாமி - நமஸ்காரம் செய்கிறேன்.

ததோ யுத்த பரிஸ்ராந்தம்
ஸமரே சிந்தயா ஸ்த்திதம் ।
ராவணம் சாக்ரதோ த்ருஷ்ட்வா
யுத்தாய ஸமுபஸ்த்திதம் ॥ 1

தைவதைஸ்ச ஸமாகம்ய
தரஷ்டுமப்யாகதோ ரணம்
உபகம்யாப்ரவீத் ராம
மகஸ்த்யோ பகவான் ரிஷிஃ ॥ 2

(ப-ரை) ததஃ - பிறகு, ரணம் - யுத்தத்தை, த்ரஷ்டும் - பார்ப்பதற்கு, தைவதைஸ்ச - தேவதைகளோடு, ஸமாகம்ய - சேர்ந்து, அப்யாகதஃ - வந்த, பகவான் - ஷாட்குண்ய பரிபூர்ணரான, அகஸ்த்ய: - அகஸ்த்திய ரென்ற, ரிஷி: - முனிவர், யுத்தபரிஸ்ராந்தம் - யுத்தத்தில் களைப்படைந்தவனையும், யுத்தாய - யுத்தம் செய்வதற்காக, அக்ரதஃ - முன்னே, ஸமுபஸ்த்திதம் - ஸமீபத்தில் இருக்கிறவனுமான, ராவணஞ்ச - ராவணனையும், ஸமரே - யுத்தத்தில், சிந்த்யா - கவலையுட, ஸ்த்திதம் - இருக்கிற, ராமம் - ராமரையும், த்ருஷ்ட்வா - பார்த்து, உபகம்ய - அடைந்து, அப்ரவீத் - சொன்னார்.

(தாத்பர்யம்) ராமரும் ராவணனும் ஓயாமல் யுத்தம் செய்ததால், இராவணன் சிறிது இளைப்படைந்து சிரமபரிஹாரம் செய்து மறுபடியும் யுத்தம் செய்யவந்த ராவணனையும், பலிஷ்டனான ராவணனை எப்படி ஸம்ஹரிப்பது என்று கவலையுடனிருக்கிற ராம

ரையும் அகஸ்தியர் ஸமஸ்த தேவதைகளு டன் பார்த்து ராவணனை இப்போதே ஜயிக் கப் போகிருய் கவலைப்படாதே, உன் வீர் யம் விருத்தி அடைவதற்காக ஆதித்யஹ்ரு தய ஸ்தோத்திரத்தினுல் ஸூர்யபகவானை உபாஸிக்கவும் என்று எண்ணங்கொண்டு ராமனை அணுகி இவ்விதம் சொன்னுர் :—

ராம ராம மஹாபாஹோ
ஶ்ருணு குஹ்யம் ஸனுதனம் ।
யேன ஸர்வா நரீன் வத்ஸ
ஸமரே விஜயிஷ்யஸி ॥ 3

(ப - ரை) மஹாபாஹோ - நீண்ட கைகளை யுடையவனே, வத்ஸ-குழந்தாய்,ராம ராம -ஹேராம ஹேராம, யேன - எதினுல், ஸம ரே-யுத்தத்தில், ஸர்வாநரீன் - எல்லா சத்து ருக்களை, விஜயிஷ்யஸி - ஜயிப்பாயோ, ஸனு தனம் - புராதனமான (அப்போக்கொத்த), குஹ்யம் - ரஹஸ்யத்தை, ஶ்ருணு - கேள்.

(தா-ம்) நீண்ட கைகளை உடைய ஏராம,

ஓ குழந்தாய், நீ எதினால் எல்லா சத்துருக்களையும் வெல்லுவாயோ அப்பேர்க்கொத்த மிகவும் பழமையான ரஹஸ்யத்தைச் சொல்லுகிறேன். அதைக் கேள்.

ஆதித்யஹ்ருதயத்தின் பெருமையை இரண்டு ஸ்லோகங்களால் கூறுகிறார் :—

ஆதித்யஹ்ருதயம் புண்யம்
ஸர்வஶத்ரு விநாஶனம் ।
ஜயாவஹம் ஜபேந் நித்யம்
அக்ஷயம் பரமம் ஶிவம் ॥ 4

ஸர்வமங்கள மாங்கல்யம்
ஸர்வ பாப ப்ரணாஶனம் ।
சிந்தாஶோக ப்ரஶமனம்
ஆயுர்வர்த்தன முத்தமம் ॥ 5

(ப - ரை) புண்யம் - புண்யத்தை உண்டு பண்ணுகிறதும், ஸர்வஶத்ரு விநாஶனம் - எல்லா சத்துருக்களை நாசம்செய்கின்றதும், ஜயாவஹம்-ஜயத்தை அளிக்கின்றதும், நித்யம் - எப்பொழுதும், அக்ஷயம் - அழிவில்

லாததும், பரமம் - சிரேஷ்டமானதும், ஶிவம் - மங்களகரமானதும், ஸர்வமங்கள மாங்கல்யம் - எல்லா மங்கள வஸ்துக்களுக்கும் மங்களம்போன்றதும்,ஸர்வபாபப்ரணாஶனம் - எல்லாவித பாபங்களை தொலைக்கின்றதும், சிந்தாஶோக ப்ரஶமனம்-மனக்கவலையை நீக்குகின்றதும், ஆயுர்வர்த்தனம் -ஆயுளை விருத்திபண்ணுகிறதும், உத்தமம்-மேன்மையானதுமான, ஆதித்யஹ்ருதயம்-சூர்யனுடைய மனதை திருப்தி செய்கின்ற ஆதித்யஹ்ருதய ஸ்தோத்திரத்தை, ஜபேத் -ஜபிக்கவேண்டும்."ஆதித்யஹ்ருதயமென்பதின் பொருள்: ஆதித்ய-சூர்யமண்டலத்தினுடைய, ஹ்ருதயம் - மத்தியிலிருக்கிற பரமாத்மா (அல்லது) ஆதித்ய-சூர்யனுடைய, ஹ்ருதயம் - மனஸை திருப்தி செய்விக்கின்ற ஸ்தோத்திரம்."

(தா-ம்) ஓ ராமா, ஆதித்யஹ்ருதயமென்ற ஸ்தோத்திரத்தை நீ ஜபிக்கவேண்டும். அதை ஜபிக்கிறவர்களின் பாபங்களை அகற்றி மனி

தனே புனிதமாகச் செய்கின்றது. எல்லா சத்ருக்களே வெல்லும்படி செய்யும். ஜயத்தையும் கொடுக்கும். வேதத்தைப்போல் அழிவில்லாதது. ஒருநாளும் அழிவில்லாமல் மிகவும் மங்களத்தை அளிக்கும். எல்லா மங்கள வஸ்துக்களுக்கும் மங்களமாயுள்ளதும், எல்லாவித பாபங்களே நசிக்கும்படி செய்யும். மனக்கவலேயை நீக்கும் தீர்க்காயுளேக் கொடுக்கும். எல்லாவித ஸ்தோத்திரங்களேக் காட்டிலும் மிகவும் சிறந்தது. ஆகையால், நீ அந்த ஸ்தோத்திரத்தை ஜபிக்கவும்.'

ஆதித்யனேக் குறித்து ஸ்தோத்திரம் செயகிருர் :—

ரஶ்மிமந்தம் ஸமுத்யந்தம்
தேவாஸுர நமஸ்க்ருதம் ।
பூஜயஸ்வ விவஸ்வந்தம்
பாஸ்கரம் புவனேஶ்வரம் ॥ 6

(ப - ரை) ரஶ்மிமந்தம் - ஞானரூபமாயும்

பிரகாசரூபமாயுமுள்ள கிரணங்களை உடையவரும், ஸமுத்யந்தம் - புதுபுதியதாய் உதிக்கிறவர்போன்றவரும், ஸ்ருஷ்டி முதலியவைகளில் முயற்சியுடையவரும், தேவாஸுரநமஸ்க்ருதம்-தேவர்களாலும் அஸுரர்களாலும் நமஸ்கரிக்கப்பட்டவரும், விவஸ்வந்தம் - எப்போதும் 'விவஸு' என்ற மணியை தரிக்கிறவரும் (அல்லது) தனது காந்தியால் மற்றவைகளை மறைப்பவனும், பாஸ்கரம்-காந்தியை பரவச்செய்கிறவனும், புவனேஶ்வரம் - உலகத்துக்கு ஈஶ்வரருமான (சூர்யனை), பூஜயஸ்வ - பூஜைசெய்.

(தா - ம்) பஞ்சேந்திரியங்கள் மூலமாய் அநேக ஞானரஶ்மி உடையவரும், தங்க நிறமுள்ள கிரணங்களை உடைய்வரும், தான் உதித்து அவரவர்களின் கர்மாக்களை செய்யத் தூண்டுகிறவரும், ஸ்ருஷ்டி ஸ்த்திதி ஸம்ஹாரங்களில் முயற்சி செய்கின்றவரும், தேவர்களாலும் அஸுரர்களாலும் நமஸ்கரிக்கப்பட்டவரும், எப்போதும் 'விவஸு

என்ற ஓர் மணி விசேஷத்தைத் தரிக்கிற வரும், தனது ஒளியால் எல்லா ஒளியை மறைக்கும்படி செய்பவரும், பதார்த்தங் களின் ஸ்வரூபத்தை தெரிவிக்க தனது ஒளியை பரவச்செய்கிறவரும், தனது கிர ணங்கள் மூலமாய் மழையை வர்ஷித்து உல கத்தைக் காப்பாற்றுகிறவருமான சூர்யனை பூஜிக்கவும்.

எல்லா தேவதைகளைக் காட்டிலும் மே லானவரென்பதை நிரூபிக்கிறார் :—

ஸர்வதேவாத்மகோ ஹ்யேஷ
தேஜஸ்வீ ரஸ்மிபாவனஃ।
ஏஷ தேவாஸுரகணான்
லோகான் பாதி கபஸ்திபிஃ॥ 7

(ப - ரை) ஏஷஃ - இந்த ஸூர்யபகவான் (ஸூர்யமண்டலத்திலிருக்கும் பரமாத்மா) ஸர்வதேவாத்மக - ஸமஸ்த தேவதை களின் ஆத்மஸ்வரூபமுள்ளவர், தேஜஸ்வீ - அதிக தேஜஸுடையவர், ரஸ்மிபாவன -

தனது கிரணங்களால் சிலாகிக்கத் தகுந்தவர் (அல்லது) ஞானரஸ்மியால் யோகிகளை பிரும்மலோகத்தை அடையும்படி செய்கிறவர், தேவாஸுரகணான் - தேவாஸுரக் கூட்டங்களையும், லோகான் - எல்லா உலகங்களையும், கபஸ்த்திபிః - கிரணங்களால், பாதி - ரக்ஷிக்கிறார்.

(தா-ம்) இந்த ஸூர்யபகவான் ஸமஸ்த தேவதாஸ்வரூபி எல்லா வஸ்துக்களை விளக்கக்கூடிய அதிக ஒளியை உடையவர். தனது கிரணங்களால் சிலாகிக்கத் தகுந்தவர். தேவலோகம் முதலிய எல்லா உலகத்தையும் தனது கிரணங்களால் காப்பாற்றுகிறார். அதாவது; சூரியனைக் குறித்தது அக்கினியில் ஹோமம் செய்வது ஸூரியனை அடைகிறது. ஸூரியனிடமிருந்து மழை உண்டாகிறது. மழையால் தான்யம் முதலியவைகள் உண்டாகின்றன. புரோடாசம் முதலியவைகளால் தேவர்கள் முதலிய எல்லா ஜனங்களும் காப்பாற்றப்படுகிறார்கள்.

அல்லது, தனது கிரணங்களால் ஜலத்தை இழுத்து மேகமாக்கி வர்ஷித்து பயிர் உண்டாக்கி அதனுல் ஜனங்களைக் காப்பாற்று கிருர் என்பது அதின் கருதது.

இவ்விதம், இந்த ஸூர்யநாராயணரும் எல்லா தேவதா ஸ்வரூபி. இவர் தனது கொஞ்சம் தேஜஸினுல் எல்லாவற்றையும் விளங்கச் செய்கிறவர். ஞானரஶ்மியால் யோகிகளை பிரும்மலோகத்தை அடையும் படி செய்கிறவர். எல்லா உலகத்தையும் ரக்ஷிக்கிறவர்.

சமஸ்த தேவதைகளுக்கும் இவரே அந்தராத்மா என்பதை நிரூபிக்கிருர் :—

ஏஷ ப்ரஹ்மா ச விஷ்ணுஶ்ச
ஶிவஃ ஸ்கந்தஃ ப்ரஜாபதிஃ ।
மஹேந்த்ரோ தனதஃ காலோ
யமஃஸோமோ ஹ்யபாம்கதிஃ ॥ 8

(ப - ரை) ஏஷஃ - இவர், ப்ரஹ்மாச - பிரம்மாவாகவும், விஷ்ணுஶ்ச-விஷ்ணுவாகவும்,

ஶிவ: - சிவனாகவும் ஸ்கந்த: - சுப்ரமண்ய ராகவும், ப்ரஜாபதி: - நவப்ரஜாபதியாக வும், மஹேந்த்ர: - தேவேந்திரனாகவும், தனத: - குபேரனாகவும், கால: - ம்ருத்யு வாகவும், யம: - யமனாகவும், ஸோம: - சந் திரனாகவும், அபாம்பதி: - ஜலத்திற்கு அதி பதியான வருணனாகவும்.

பிதரோ வஸவஃஸாத்யா
ஹ்யஶ்விநௌ மருதோ மனு:।
வாயுர் வஹ்னி: ப்ரஜாப்ராண
ருதுகர்தா ப்ரபாகர:॥ 9

(ப - ரை) பிதர: - அக்னிஷ்வாத்தாதிக ளான பித்ருக்களாகவும், வஸவ: - அஷ்ட வஸுக்களாகவும், ஸாத்யா: - ஸாத்யர்க ளென்ற தேவ விசேஷங்களாகவும், அஶ்வி னௌ - அஶ்வினீ தேவதைகளாகவும், மருத: - மருத்கணங்களாகவும், மனு: - மனுச்சக்ரவர்த்தியாகவும், வஹ்னி: - அக் கினியாகவும், ப்ரஜாப்ராண:- பிராணிகளின்

பிராணவாயுவாகவும், ருதுகர்தா - வஸந்தம் முதலிய ஆறுருதுக்களை உண்டுபண்ணுகிறவராகவும், ப்ரபாகர: - ஸூர்யனுகவும் (ஆகிருர்).

(தா-ம்) இவரே பிரம்மாவாகவும், விஷ்ணுவாகவும், சிவனுகவும், சுப்ரமண்யராகவும், நவப்ரஜாபதிகளாகவும், இந்திரனுகவும் குபேரனுகவும், மிருத்யுவாகவும், யமனுகவும் சந்திரனுகவும், வருணனுகவும், பித்ருக்களாகவும், அஷ்டவசுக்களாகவும், சாத்யர்களாகவும், மனுச்சக்ரவர்த்தியாகவும், அக்னியாகவும், பிராணிகளின் பிராணவாயுவாகவும், ஆறு ருதுக்களைஉண்டுபண்ணுகிறவராகவும் ஸூர்யனுகவும் ஆகிருர். இவரே எல்லாவர்களுக்கும் அந்தராத்மாவாக உள்ளவர்.

இப்போது ஆதித்யஹ்ருதயம் என்ற ஸ்தோத்திரத்தை உபதேசிக்கிருர்:—

ஆதித்ய: ஸவிதா ஸூர்ய:
கக: பூஷா கபஸ்திமான் ।

ஸுவர்ண ஸத்ருஸோ பாநு:
ஹிரண்ய ரேதா திவாகர: ॥ 10

(ப - ரை) ஆதித்ய: - அதிதியின் புத்திரன், ஸவிதா ஜனங்களை படைக்கிறவர். ஸூர்ய: அவரவர்களின் கர்மாக்களைசெய்விப்பிக்கிறவர். ககः - ஆகாயத்தில் ஸஞ்சரிப்பவர். பூஷா - உலகங்களை போஷிப்பவர். கபஸ்திமான் - கிரணங்களைஉடையவர். ஸுவர்ண ஸத்ருஸ: - சுவர்ணத்துக்கு சமானமான வர்ணமுடையவர். பானு: - எங்கும் பிரகாசிக்கிறவர். ஹிரண்யரேதா:- தங்கமயமான பிரம்மாண்டத்தைப் படைக்கிறவர். திவாகர: - பகலில் ஜனங்களை காரியத்தில் செய்விக்கிறலர். அறிவை உண்டுபண்ணுகிறவர்.

ஹரிதஸ்வ: ஸஹஸ்ரார்சி:
ஸப்தஸப்திர் மரீசிமான் ।
திமிரோன் மதன: ஸம்புஸ்[மான்
த்வஷ்டா மார்தாண்ட அம்ஸு

(ப - ரை) ஹரிதஸ்வ: - திக்குகளில் எங்

கும் வியாபிக்கிறவர் (அல்லது) பச்சைக் குதிரையை உடையவர். ஸஹஸ்ரார்சிஃ - ஆயிரம் கிரணங்களை உடையவர். ஸப்த ஸப்திஃ - ஸப்த என்னும் குதிரையை உடையவர். மரீசிமான் வெகு ஒளியையுடைய கிரணங்களை யுடையவர் (அல்லது) சத்ருக்களை வெல்லும் சக்ராயுதமுடையவர். ஶம்புஃ - சுகத்தை அளிக்கிறவர். த்வஷ்டா - எல்லாவற்றையும் அழிப்பவர். மார்தாண்ட - எல்லாவற்றையும் சம்ஹரித்தபிறகு உலகங்களைப் படைக்க மறுபடியும் உண்டாக்குகிறவர். அம்ஶுமான் - எங்கும் வியாபிக்கும் ஒளியை உடையவர்.

ஹிரண்யகர்ப்பஃ ஶிஶிரஸ்
தபனோ பாஸ்கரோ ரவிஃ ।
அக்னிகர்ப்போ திதேஃ புத்ரஃ
ஶங்க்கஃ ஶிஶிர நாஶனஃ ॥ 12

(ப - ரை) ஹிரண்யகர்ப்பஃ - சுவர்ணமயமான பிரம்மாண்டத்திலிருப்பவர் (அல்லது)

எல்லா உலகங்களின் ஸ்ருஷ்டி ஸ்த்திதி ஸம்ஹாரம் செய்கிறவர். ஶிஶிரஃ-குளிர்ந்தவர் (அதாவது) சுகஸ்வபாவத்தை உடையவர். தபனஃ - தபிக்கச்செய்கிறவர் (அல்லது) ஸ்வயமாகவே ஐசுவரியமுடையவர். பாஸ்கரஃ - ஒளியை பரவச்செய்கிறவர். ரவிஃ - ஸ்தோத்திரம் செய்யப்படுகிறவர். அக்னிகர்ப்பஃ-பகலில் அக்னியை மத்தியிலுடையவர். அதிதேஃ புத்ரஃ - அதிதியின் புதல்வர். ஶங்க்கஃ - தானுகவே ஶமன்மடைகிறவர் (அல்லது)பரமானந்தஸ்வரூபியும் ஆகாயம் போல் எங்கும் வியாபிக்கிறவர். ஶிஶிர நாஶனஃ - பனியை நாசஞ்செய்கிறவர்.

> வ்யோமநாதஸ் தமோபேதீ
> ருக்யஜுஸ்ஸாமபாரகஃ ।
> கன்வ்ருஷ்டி ரபாம் மித்ரோ
> விந்த்யவீதி ப்லவங்கமஃ ॥ 13

(ப - ரை) வ்யோமநாதஃ - ஆகாயத்தைப் படைத்தவர். ஆகாயத்துக் கரசன். தமோ

பேதி-இருளை போக்கடிக்கிறவர் (அல்லது) பக்தர்களின் அஞானத்தை விலக்குகிறவர். ருக்யஜுஸ்ஸாமபாரகஃ ருக்வேதம், யஜுர் வேதம், ஸாமவேதம் இவைகளின் கரையை யடைந்தவர். கனவ்ருஷ்டிஃ - அதிக மழையை பெயயும்படி செய்பவர். அபாம் மித்ரஃ -ஜலங்களுக்கு மித்திரர் (அல்லது) சமுத்திரததில் சயனிக்கிறவர். விந்த்யவீதி ப்லவங்கமஃ - தக்ஷிணாயனத்தில் விந்தியமலை வழியாய்ச் செல்லுகிறவர்.

ஆதபீ மண்டலீ ம்ருத்யுஃ
பிங்களஃ ஸர்வதாபனஃ ।
கவிர்விஸ்வோ மஹாதேஜாஃ
ரக்தஃ ஸர்வ பவோத்பவஃ ॥ 14

(ப - ரை) ஆதபீ - வெயிலை உடையவர். மண்டலீ-வட்டமான பிம்பத்தை உடையவர். ம்ருத்யுஃ - விரோதிகளை வெல்லுகிறவர். பிங்களஃ - உதயகாலத்தில் பொன்னிறமுடையவர். ஸர்வதாபனஃ - எல்லாவற்றை

யும் தபிக்கச் செய்கிறவர். கவிஃ - சாஸ்தி ரங்களை இயற்றியவர். விஸ்வஃ - தானே உல கத்தைப் படைத்து உலகத்தினுள் புகுந்த வர். மஹாதேஜாஃ - அதிக தேஜஸ் உடை யவர். ரக்தஃ - எல்லாவரிடத்திலும் அன் புள்ளவர். ஸர்வபவோத்பவ - எல்லாவற் றின் உற்பத்திக்குக் காரணமாயுள்ளவர்.

நக்ஷத்ரக்ரஹ தாராணும்
அதிபோ விஸ்வபாவனஃ।
தேஜஸாமபி தேஜஸ்வீ
த்வாதஸாத்மன் நமோஸ்துதே ॥

(ப - ரை) நக்ஷத்ரக்ரஹதாராணும் - அஸ் வினி முதலிய நக்ஷத்திரங்கள், நவக்ரஹங் கள், சாதாரண நக்ஷத்ரங்கள்இவைகளுக்கு, அதிபஃ- தலைவர்,விஸ்வபாவனஃ - உலகத்தை ஸ்தாபிக்கிறவர். தேஜஸாமபி - அக்னி முத லிய தேஜஸ்களுக்குள், தேஜஸ்வீ - அதிக ஒளியுள்ளவர். த்வாதஸாத்மன் - பன்னி ரண்டுமூர்த்தி உடையவரே, தே - உமக்கு,

நம: - நமஸ்காரம், அஸ்து - இருக்கட்டும்.

(10-15. கா ம்) அதிதியின் புதல்வரும், ஜனங்களை படைக்கிறவரும், அவரவர்களின் கர்மாக்களைச் செய்விப்பிக்கிறவரும், ஜனங்களின் உபகாரத்திற்காக எப்போதும் ஆகாயத்தில் சஞ்சரிக்கிறவரும், கிரணங்கள் மூலமாய் ஜலத்தை இழுத்து மழையைப் பெய்யும்படிசெய்து உலகத்தைக் காப்பாற்றுகிறவரும், மேன்மையான கிரணங்களை உடையவரும், தங்கவர்ணமுடையவரும், எங்கும் பிரகாசிக்கிறவரும், பொன்மயமான பிரம்மாண்டத்தைப் படைக்கின்றவரும், பகலை உண்டாக்கி ஜனங்களை தன் தன் காரியங்களில் ஏவுகிறவரும் (அல்லது) அறிவை உண்டுபண்ணுகிறவரும், (11) திக்குகளில் எங்கும் வியாபிக்கிறவரும், ஆயிரம் கிரணங்களுடையவரும், ஸப்த என்கிற குதிரை உடையவரும், வெகு ஒளியை யுடைய கிரணங்களை உடையவரும், சுகத்தை அளிப்ப

வரும்,எல்லாவற்றையும் ஸம்ஹரிப்பவரும்,
ஸம்ஹரித்தபிறகு உலகத்தை உண்டாக்க
அதில் தோன்றுகிறவரும், எங்கும் வியா
பிக்கும் ஒளியை உடையவரும், (12) சுவர்
ணமயமான பிரம்மாண்டத்திலிருப்பவரும்,
எல்லா உலகத்தின் ஸ்ருஷ்டி ஸ்த்திதி சம்
ஹாரங்களைச் செய்கின்றவரும், தாபதாயத்
தினல் தபிக்கிறவர்களின் தாபத்தை போக்
கடித்து குளிரச்செய்கிறவரும், சுகஸ்வபாவ
முடையவரும், எங்கும ஒளியை பரவச்
செய்கிறவரும், அனைவராலும் ஸ்துதிக்கப்
படுகிறவரும், பகலில் அக்னியை கர்ப்பத்தி
லுடையவரும்,அதிதிக்கு புதல்வரும்,சாயங்
காலத்தில் தானகவே ஶமநமடைகிறவரும்
பரமானந்த ஸ்வரூபியாயும்,ஆகாயம்போல்
எங்கும் வியாபிக்கிறவரும், பனியை போக்
கடிக்கிறவரும், (13) ஆகாயத்திற்கு அரச
னும், இருளை போக்கடிக்கிறவரும், பக்தர்
களின் அஞ்ஞானத்தை விலக்குகிறவரும்,
ருக் யஜுஸ் ஸாமம் இம்மூன்று வேதங்

களின் கரையைக் கண்டவரும், அதிகமழை யைப் பெய்யும்படி செய்கிறவரும், ஜனங்க ளுக்கு மித்ரரும், தக்ஷிணாயனத்தில் விந்திய மலை வழியாய்ச் செல்லுகிறவரும், (14) வெ யிலை உடையவரும், வட்டமான பிம்பத்தை உடையவரும், விரோதிகளை வெல்லுகிற வரும், உதயகாலத்தில் பொன்னிறமுடைய வரும், எல்லாவற்றையும் தபிக்கச் செய்கிற வரும், சாஸ்திரங்களை இயற்றியவரும், உல கத்தினுட் புகுந்தவரும், அதிக தேஜஸு டையவரும், எல்லாவரிடத்திலும் அன்புள் ளவரும், எல்லாவற்றின் உற்பத்திக்கும் கா ரணமாயுள்ளவரும், (15) அஶ்வினி முத லிய நக்ஷத்ரங்கள், நவக்ரஹங்கள், சாதா ரண நக்ஷத்ரங்கள் இவைகளுக்குத் தலைவ ராயிருப்பவரும், ரக்ஷிப்பதனால் உலகத்தை ஸ்தாபிப்பவரும், அக்னி முதலிய ஒளிக ளுக்குள் அதிக ஒளியுள்ளவரும், பன்னி ரெண்டு மூர்த்தியாயுமுள்ள உமக்கு அநேக நமஸ்காரம்.

நமஃ பூர்வாய கிரயே
பஶ்சிமே கிரயே நமஃ ।
ஜ்யோதிர் கணாநாம் பதயே
தினாதிபதயே நமஃ ॥ 16

(ப - ரை) பூர்வாய - கிழக்கு திக்கிலுள்ள, கிரயே - மலையிலிருக்கும் (உமக்கு), நமஃ - நமஸ்காரம், பஶ்சிமே - மேற்கு திக்கிலுள்ள, கிரயே - மலையிலிருக்கும் (உமக்கு), நமஃ - நமஸ்காரம், ஜ்யோதிர்கணாநாம் - ஒளிகளின் கூட்டங்களுக்கு, பதயே - தலைவராயும், தினாதிபதயே - பகலுக்கு அதிபதியுமான (உமக்கு), நமஃ - நமஸ்காரம்.

(தா-ம்) உதயபர்வதத்திலிருக்கும் உமக்கு நமஸ்காரம். அஸ்தமான பர்வதத்திலிருக்கும் உமக்கு நமஸ்காரம். ஒளிகளின் கூட்டங்களுக்கதிபதியான உமக்கு நமஸ்காரம். பகலுக் கதிபதியான உமக்கு நமஸ்காரம்.

ஜயாய ஜயபத்ராய
ஹர்யஶ்வாய நமோ நமஃ ।

நமோ நம꞉ ஸஹஸ்ராம்ஶோ
ஆதித்யாய நமோ நம꞉ ॥ 17

(ப - ரை) ஜயாய - ஜயசீலரும், ஜயபத்ராய- ஜயம் மங்களம் இவைகளை கொடுப்பவரும், ஹர்யஶ்வாய - பச்சைக் குதிரை யுடையவருமான (உமக்கு), நமோ நம꞉ , நமஸ்காரம், நமஸ்காரம். ஸஹஸ்ராம்ஶ꞉ - ஆயிரம் கிரணங்களுடையவரே, ஆதித்யாய - அதிதியின் புதல்வரான (உமக்கு), நமோ நம꞉ - நமஸ்காரம் நமஸ்காரம்.

(தா - ம்) ஜயசீலரும், ஜயம் மங்களம் இவைகளைக் கொடுப்பவரும், பச்சைக் குதிரை யுடையவருமான உமக்கு நமஸ்காரம், நமஸ்காரம். ஆயிரம் கிரணங்களை உடைய அதிதியின் புதல்வரான உமக்கு நமஸ்காரம், நமஸ்காரம்.

குறிப்பு.—இரண்டு தடவை நமஸ்காரம் சொல்வது தனது அதிக ஆதரவைக் காண்பிக்கிறது.

நம உக்ராய வீராய
ஸாரங்காய நமோ நம:।
நம: பத்ம ப்ரபோதாய
மார்தாண்டாய நமோ நம:॥ 18

(ப - ரை) உக்ராய-பயங்கரராயும், வீராய - பராக்ரமமுள்ளவருமான (உமக்கு), நம: - நமஸ்காரம், ஸாரங்காய - வெகு சீக்கிரம் செல்லுகிற (அல்லது) காலசக்ரத்தை போகச் செய்கிற (உமக்கு), நமோ நம - நமஸ்காரம், நமஸ்காரம். பத்மப்ரபோதாய - தாமரையை மலரச் செய்கிற (உமக்கு), நமோ நம: - நமஸ்காரம், நமஸ்காரம். மார்தாண்டாய - எல்லாவற்றையும் அழித்து மறுபடியும் உண்டுபண்ணுகின்ற (உமக்கு), நமோ நம: - நமஸ்காரம், நமஸ்காரம்.

(தா-ம்) தன்னை உபாசிக்காதவர்களுக்கு அதிக பயங்கரரும், பராக்கிரம முள்ளவருமான உமக்கு நமஸ்காரம். (சூரியன் ஒரு அரைநிமிஷத்தில் இரண்டாயிரம் யோஜனை

மைல் போகிறுரென்பது புராணம் கூறு கிறது) ஆகையால், வெகு வேகமாய்ச்செல் லும் உமக்கு நமஸ்காரம், நமஸ்காரம். இர வில் தாமரை மூடிக்கொண்டிருக்கும். பக லில் சூரியனுடைய வெளிச்சத்தைக்கண்ட தும் தாமரை மலர்ந்துவிடும். தாமரையை மலரச்செய்கிற உமக்கு நமஸ்காரம்.ப்ரளய காலத்தில் உலகமனைவற்றையுமழித்து மறு படியும் ஸ்ருஷ்டிக்கின்ற உமக்கு நமஸ்கா ரம், நமஸ்காரம்.

ப்ரஹ்மேசாநாச்யுதேசாய
ஸூர்யாயாதித்யவர்சஸே ।
பாஸ்வதே ஸர்வபக்ஷாய
ரௌத்ராய வபுஷே நம: ॥ 19

(ப - ரை) ப்ரஹ்மேசா நாச்யுதேசாய - பிரம்மா சிவன் விஷ்ணு இவர்களுக் கதிபதி யும், ஆதித்யவர்சஸே - ஆதித்யரூபமான ஒளியை உடையவரும், ஸூர்யாய - ஜனங் களை காரியத்தில் ஏவுகிறவரும்,பாஸ்வதே-

ஒளியை யுடையவரும், ஸர்வபக்ஷாய-அனை வற்றையும் ஸம்ஹரிப்பவரும் (ஆகையால்), ரௌத்ராய - அச்சமயத்தில் பயங்கரரு மான, வபுஷே - சரீரமுடைய (உமக்கு), நமஃ - நமஸ்காரம்.

(தா - ம்) "அஸாவாதித்யோ ப்ரஹ்ம" என்ற ஶ்ருதியால் சூரியனை பரபிரம்மமாக பாவித்து பிரம்மா சிவன் விஷ்ணு இவர்க ளுக்கும் தலைவரும், ஆதித்யரூபமான ஒளி யை யுடையவரும், ஜனங்களைத் தன் தன் காரியத்தைச் செய்வதில் ஏவுகிறவரும், மிக வும் ஒளியை யுடையவரும், பிரளயத்தில் அனைவற்றையும் ஸம்ஹரிப்பவரும், அச் சமயத்தில் அதிக பயங்கரமான உருவங் கொண்டவருமான உமக்கு நமஸ்காரம்.

தமோக்னாய ஹிமக்னாய
ஶத்ருக்னாயாமிதாத்மனே ।
க்ருதக்னக்னாய தேவாய
ஜ்யோதிஷாம் பதயே நமஃ ॥ 20

(ப - ரை) தமோக்நாய - இருளைப் போக்கடிப்பவரும், ஹிமக்நாய - பனியை நசிக்கச் செய்பவரும், ஶத்ருக்நாய - சத்துருக்களை வெல்லுகிறவரும், அமிதாத்மனே - அளவிடமுடியாத மஹிமையை உடையவரும், க்ருதக்னக்நாய - செய்த நன்றி மறந்தவனைக் கொல்லுகிறவரும், தேவாய ஸ்வயம்பிரகாசிக்கிறவரும், ஜ்யோதிஷாம் - அக்னி முதலிய ஒளிகளுக்கு, பதயே - தலைவருமான (உமக்கு), நம: - நமஸ்காரம்.

(தா-ம்) இருளைப் போக்கடிப்பவரும், பனியை நசிக்கச்செய்கிறவரும், சத்ருக்களை அழிப்பவரும், அளவிடமுடியாத மஹிமையை உடையவரும, செய்த நன்றி மறந்தவனைக் கொல்லுபவரும், தனது ஒளியால் பிரகாசிக்கிறவரும், அக்னி முதலியஎல்லா ஒளிகளுக்கும் தலைவருமானஉமக்கு நமஸ்காரம்

தப்தசாமீகராபாய
வஹ்னயே விஶ்வகர்மணே ।

நமஸ் தமோபிநிக்னய
ருசயே லோகஸாக்ஷிணே ॥ 21

(ப - ரை) தப்தசாமீகராபாய - உருக்கின ஸுவர்ணத்திற்கு சமானமான காந்தியை உடையவரும், வஹ்னயே - அக்னிஸ்வரூபி யும், விஸ்வகர்மணே - உலகத்தைப் படைப் பவரும், தமோபிநிக்னய - இருளைப் போக் கடிப்பவரும் (அல்லது) அஞ்ஞானத்தை விலக்குகிறவரும், ருசயே - பிரகாசிக்கிற வரும், லோகஸாக்ஷிணே - ஜனங்களின் கர் மாக்களுக்கு ஸாக்ஷியாயுமுள்ள (உமக்கு), நமஃ - நமஸ்காரம்.

(தா-ம்) உருக்கின சுவர்ணத்திற்கு சமா னமான காந்தியை உடையவரும், அக்னி ரூபியாய் ஹவிஸை வஹிக்கிறவரும், உல கத்தைப் படைப்பவரும், ஜனங்களின் அஞ் ஞானத்தை விலக்குகிறவரும், இருளைப் போக்கடிப்பவரும், தனது ஒளியால் பிர காசிக்கிறவரும், ஜனங்களின் உட்புகுந்து

அவர்களின் புண்யபாபங்களுக்கு சாக்ஷியா யிருப்பவருமான உமக்கு நமஸ்காரம்.

நாஶயத்யேஷவை பூதம்
ததேவ ஸ்ருஜதி ப்ரபு: ।
பாயத்யேஷ தபத்யேஷ
வர்ஷத்யேஷ கபஸ்திபி: ॥ 22

(ப - ரை) ஏஷவை இவரே, பூதம் உலகத்தை, நாஶயதி அழிக்கிறார். ப்ரபுரேவ சகல பிரபஞ்சத்திற்கு நியாமகரான இவரே, (மறு படியும்) தத் - அவ்வுலகத்தை, ஸ்ருஜதி - ஸ்ருஷ்டிக்கிறார். ஏஷ:-இவரே, கபஸ்திபி:- கிரணங்களால், பாயதி உலர்த்துகிறார். ஏஷ: இவரே, தபதி : தபிக்கச் செய்கிறார். ஏஷ: இவரே, வர்ஷதி மழைபெய்யவும்செயகிறார்.

(தா - ம்) ஸகல பிரபஞ்சத்திற்கு நியாமகரான இந்த பகவான் உலகத்தை அழிக்கிறார். மறுபடியும் ஸ்ருஷ்டிக்கிறார். தனது கிரணங்களால் உலர்த்துகிறார். தபிக்கவும் செய்கிறார். மழை பெய்யவும் செய்கிறார்.

ஏஷஸுப்தேஷு ஜாகர்வேஷு
பூதேஷு பரிநிஷ்ட்டிதா ।
ஏஷ ஏவாக்னிஹோத்ரஞ்ச
பலம் சைவாக்னிஹோத்ரிணாம் ॥

(ப — ரை) ஏஷ: — இந்த பகவான், ஸர்வே ஷு எல்லா, பூதேஷு-பிராணிகள், ஸுப் தேஷு — தூங்கும்போது, பரிநிஷ்ட்டித:— எங்கும் வியாபித்து(விழித்து)க்கொண்டு இருக்கிறார். ஏஷ ஏவ — இவரே, அக்னி ஹோத்ரஞ்ச— அக்னிஹோத்ர ரூபியாகவும், அக்னிஹோத்ரிணாம் — அக்னிஹோத்ரம் செய்கிறவர்களுக்கு பலம்:பலரூபமாகவும் (பலத்தைக் கொடுப்பவராகவும்) ஆகிறார்.

(தா:ம்) எல்லாப் பிராணிகள் தூங்கும் போது தான் எங்கும் வியாபித்துக்கொண்டு இவர் ஒருவரே விழித்துக்கொண்டிருக்கிறார். இவர் அக்னிஹோத்ர ரூபியாகவும், அக்னிஹோத்ரம் செய்கிறவர்களுக்கு பலத்தையும் அளிக்கின்றார்.

வேதாஸ்ச க்ரதவஸ்சைவ
க்ரதூனும் பலமேவ ச ।
யானி க்ருத்யானி லோகேஷு
ஸர்வ ஏஷ ரவிஃ ப்ரபுஃ ॥ 24

(ப - ரை) தேவாஸ்ச - யாகதேவதைகளா கவும், க்ரதவஸ்சைவ - ஸோமம் முதலிய யாகங்களாகவும், க்ரதூனும் - யாகங்களுடைய, பலமேவ ச - பலமாகவும்(ஆகிறார்). லோகேஷு - எல்லா உலகங்களில், யானி- எந்தெந்த, க்ருத்யானி-கார்யங்கள் (இருக்கின்றனவோ) அவைகளுக்கு, ஸர்வஃ - ஸர்வாத்மாவான, ஏஷஃ - இந்த, ரவிஃ-சூரியபகவானே, ப்ரபுஃ - நியாமகரா க(இருக்கிறார்).

(தா - ம்) முப்பத்து மூன்றுகோடி யாக தேவதைகளாகவும், ஸோமயாகம் முதல் அஸ்வமேதம் வரையிலுள்ள யாகங்களாகவும்,யாகாதிகளின் பலங்களான ஸ்வர்காதிகளாகவும் யாகங்களுக்குச்சாதனமான ரித்விக், யஜமானன், ஸமித், ஆஜ்யம், பசு முத

லியவைகள் யாதொன்றுண்டோ அவைகள் எல்லாவற்றிற்கும் ஸர்வாத்மாவாய் இந்த சூரியபகவானே நியாமகராயிருக்கிறார்.

இனி இந்த ஸ்தோத்திரத்தின் பலத்தைக் கூறுகிறார் :—

ஏனமாபத்ஸு க்ருச்ரேஷு
காந்தாரேஷு பயேஷு ச।
கீர்தயன் புருஷ: கஶ்சின்
நாவஸீததி ராகவ ॥ 25

(ப - ரை) ராகவ - ஓராம, கஶ்சித் - ஒரு, புருஷ:-புருஷன், ஆபத்ஸு-ஆபத்துக்களிலும், க்ருச்ரேஷு - கஷ்டங்களிலும், காந்தாரேஷு-காடுகளிலும், பயேஷு ச-பயங்களிலும்,ஏனம்-இந்த ஸ்தோத்திரத்தை,கீர்தயன்-கீர்த்தனம் பண்ணுவானே(அவன்), நாவஸீததி - வருத்தமடையமாட்டான்.

(தா-ம்) ஓராமா! எவனொருவன் தனது ஆபத்துக்காலத்திலும், கஷ்டகாலத்திலும், பயமுண்டாகக்கூடிய இடங்களிலும், நாடு

களிலும்இந்த ஆதித்யஹ்ருதயத்தை ஸ்துதி பண்ணுவானாகில் கொஞ்சங்கூட வருத்த மடையவேமாட்டான்.

பூஜயஸ்வைன மேகாக்ரோ
தேவதேவம் ஜகத்பதிம் ।
ஏதத் த்ரிகுணிதம் ஜப்த்வா
யுத்தேஷு விஜயிஷ்யஸி । 26

(ப - ரை) ஏகாக்ர:-ஒரே விஷயத்தில் மனப் பற்றுதலுடையவனாய், தேவதேவம் - தேவர்களுக்கும் தேவரான, ஜகத்பதிः - எல்லா உலகத்துக்கும் ப்ரபுவான, ஏனம் - இந்த பகவானை, பூஜயஸ்வ - பூஜை செயவாயாக, ஏதத் - இந்த ஸ்தோத்திரத்தை, த்ரிகுணிதம் - மூன்றுதடவை, ஜப்த்வா - ஜபித்து, யுத்தேஷு - யுத்தங்களில், விஜயிஷ்யஸி - ஜபிக்கப்போகிறாய்.

(தா-ம்) தேவர்களுக்கும் தேவரானஎவ்வுலகத்துக்கும் ப்ரபுவான இந்த பகவானை ஒரே மனங்கொண்டு பூஜிப்பாயாக. இந்த

ஆதித்யஹ்ருதய ஸ்தோத்திரத்தை மூன்று தடவை ஜபித்து யுத்தத்தில் நிச்சயமாய் ஜயத்தை அடைவாய்.

அஸ்மின் க்ஷணே மஹாபாஹோ
ராவணம் த்வம் வதிஷ்யஸி ।
ஏவமுக்த்வா ததாகஸ்த்யோ
ஜகாம ச யதாகதம் ॥ 27

(ப - ரை) மஹாபாஹோ - ஓ நீண்ட கையை யுடையவரே, த்வம் - நீர், அஸ்மின் - இந்த, க்ஷணே - நிமிஷத்தில், ராவணம் - ராவணனை, வதிஷ்யஸி - கொல்லுவாய், ததா-அப்போதே, அகஸ்த்ய:-அகஸ்தியர், ஏவம் - இவ்விதம், உக்த்வா-சொல்லி, யதா கதம் - வந்தவழியே, ஜகாம - போனார்.

(தா-ம்) நீண்டபுஜங்களை உடைய ஓராமா நீ இந்த நிமிஷத்திலேயே ராவணனை கொல்வாயென்று அகஸ்தியர் இவ்விதம் சொல்லி விட்டு வந்தபடியே சென்றுவிட்டார்.

ஏதச் ச்ருத்வா மஹாதேஜா
நஷ்டசோகோ பவத் ததா ।

தாரயாமாஸ ஸுப்ரீதோ
ராகவ: ப்ரயதாத்மவான் ॥ 28

(ப - ரை) ததா - அப்பொழுது, மஹா தேஜா: - அதிக தேஜஸ்ஸை உடைய, ராகவ: - ராமர், ஏதத் - இவ்வார்த்தையை, ஶ்ருத்வா - கேட்டு, நஷ்டஶோக:-ஒழிந்த மனக்கவலை உடையவராக, அபவத்-ஆனார். ஸுப்ரீத: - மிகவும் சந்தோஷங்கொண்டு, ப்ரயதாத்மவான் - தெளிவான மனமுடையவராய், தாரயாமாஸ - தரித்தார்.

(தாம்) அதிக தேஜஸ்வியான ஸ்ரீராமர் இவ்வார்த்தையைக்கேட்டதும் தனது மனக்கவலை நீங்கி மிகவும் சந்தோஷங்கொண்டு மிகவும் பக்திபுடன் இதை தரித்தார்.

ஆதித்யம் ப்ரேக்ஷ்ய ஜப்த்வாத்ரி:
பரம் ஹர்ஷமவாப்தவான் ।
த்ரிராசம்ய ஶுசிர் பூத்வா
தனுராதாய வீர்யவான் ॥ 29

(ப - ரை) வீர்யவான் - மிக பராக்ரமமு

டைய (ராமர்), த்ரி: - மூன்றுதடவை, ஆசம்ய-ஆசமனஞ்செய்து, ஶுசி: - பரிசுத்தராக, பூத்வா - ஆதி, ஆதித்யம் - சூர்யனை, ப்ரேக்ஷ்ய - பார்த்து, த்ரி:-மூன்றுதடவை, ஜப்த்வா-ஜபித்து, தனு: - வில்லை, ஆதாய - எடுத்து, பரம - மிகவும், ஹர்ஷம்-சந்தோஷத்தை, அவாப்தவான் - அடைந்தார்.

(தா - ம்) மிக பராக்ரமசாலியாகிய ஸ்ரீ ராமர் மூன்று தடவை ஆசமனஞ்செய்து பரிசுத்தராகி சூரியனைப் பார்த்து ஆதித்ய ஹ்ருதயத்தை மூன்றுதடவை ஜபித்து பராக்கிரமம் விருத்தி அடைந்து தான் வில்லை எடுத்து மறுபடியும் யுத்தம் செய்ய மிகவும் சந்தோஷமடைந்தார்.

ராவணம் ப்ரேக்ஷ்ய ஹ்ருஷ்டாத்
யுத்தாய ஸமுபாகமத் । [மா
ஸர்வயத்னேன மஹதா
வதே தஸ்ய த்ருதோபவத் ॥ 30

(ப - ரை) ராவணம் - ராவணனை, ப்ரேக்ஷ்ய

- பார்த்து, ஹ்ருஷ்டாத்மா - சந்தோஷங் கொண்ட மனமுடையவராய், யுத்தாய - யுத்தத்தின் பொருட்டு, ஸமுபாகமத் - கிட்டே நெருங்கினர். மஹதா - மிகுந்த, ஸர்வ யத்னேன - எல்லாவித முயற்சியால், தஸ்ய - அந்த இராவணனுடைய, வதே - ஸம்ஹார ரத்தில், த்ருதஃ - நிச்சயங்கொண்டவராக, அபவத் - ஆனர்.

(தா-ம்) ஸ்ரீராமர் ராவணனைப் பார்த்து மிகவும் சந்தோஷமடைந்து யுத்தம் செய்வதற்காக கிட்டே நெருங்கினர். மிகுந்த முயற்சியால் இராவணனை சம்ஹரிப்பதிலேயே மிகவும் நோக்கமுள்ளவராக இருந்தார்.

அத ரவிரவதந் நிரீக்ஷ்ய ராமம்
முதிதமனாஃ பரமம் ப்ரஹ்ருஷ்யமாணஃ ।
நிஶிசரபதி ஸம்க்ஷயம் விதித்வா
ஸுரகணமத்யகதோ வசஸ்த்வரேதி ॥

(ப-ரை) அத - பிறகு, ரவிஃ - சூரியன், ராமம் - ராமரை, நிரீக்ஷ்ய-பார்த்து, முதித

LA
4-74

Q2:4

மனுஃ-சந்தோஷங்கொண்ட மனமுடையவ ராய், பரமம்-மிகவும், ப்ரஹ்ருஷ்யமாணஃ - களிப்புற்று, நிஶிசரபதி ஸம்க்ஷயம் - ராக்ஷஸாதிபதியான ராவணனை ஸம்ஹரிப்பதை, விதித்வா - தெரிவித்து (அனுக்ரஹித்து), ஸுரகணமத்யகத - தேவகணங்களின் நடுவில்இருந்துக்கொண்டு, த்வர-(ராவணவதத்தைக் குறித்து) துரிதப்படும், இதி - என்ற, வசஃ-வார்த்தையை, அப்ரவீத்-சொன்னார்.

(தா - ம்) பிறகு சூரிய பகவான் மிகவும் சந்தோஷங்கொண்டு ஸ்ரீராமரைப்பார்த்து தேவகணங்களின் நடுவில் இருந்துகொண்டு ராவணனின் ஸம்ஹாரத்தை அனுக்ரகித்து ராவண வதத்தைப்பற்றி த்வரைப்படும் என்ற வார்த்தையைச் சொன்னார்.

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் யுத்தகாண்டத்தில் நூற்றேழாவது ஸர்கத்திலுள்ள ஆதித்யஹ்ருதய ஸ்தோத்ரம் முற்றிற்று.

97873

ஸ்ரீஸரஸ்வதி போதினி ப்ரெஸ், சென்னை-21